DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**O.S.No. 220 of 2023**

Deposition of P.W. 3 } Prosecution } Defence }

Name of the Witness : திரு.கோபி

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 09.10.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது இண்டூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சி சொல்ல

நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்தது. இண்டூர் காவல் நிலைய குற்ற எண் 25/2014 சட்டபிரிவு 279, 304(ஏ) இதச புகார்தாரர் ராஜேந்திரன் த/பெ சித்தன் என்பவர் அவருடைய மகன் முனிராசு விபத்தில் 14.02.2014 அன்று இறந்து விட்டதாக கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தில் இறந்து போன முனிராசு என்பவரின் பிரேத விசாரணை அறிக்கையை எடுத்து வந்துள்ளேன். முனிராசின் ஓட்டுநர் உரிமம், முனிராசின் வண்டியின் இன்ஸ்பெக்சன் ரிப்போர்ட் எடுத்து வந்துள்ளேன். முனிராசின் இறப்பு சான்றிதழ் எடுத்து வந்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை **Ex.X4** ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை **Ex.X5** ஆகவும், முனிராசின் ஓட்டுநர் உரிமம் **Ex.X6** ஆகவும், முனிராசின் வண்டியின் இன்ஸ்பெக்சன் ரிர்போர்ட் **Ex.X 7** ஆகவும், முனிராசின் இறப்பு சான்றிதழ் **Ex.X 8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் ராஜேந்திரனின் அடையாள அட்டை எதுவும் எங்கள் கோப்புகளில் இல்லை. தண்டுகாரம்பட்டியில் சித்தன் மகன் ராஜேந்திரன் என்று நிறையபேர் இருக்கிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் 2016ல் தான் பணிக்கு சேர்ந்தேன். ஆவணங்களை பார்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். புகார் யாரால் கொடுக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. இந்த முதல் தகவல் அறிக்கை

உதவி ஆய்வாளர் குமேரசன் எந்த பதவியில் இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. புகார்தாரரின் வீட்டின் கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாததால் என்னுடைய சாட்சியத்தை ஏற்று கொள்ள முடியாது என்றால் சரியல்ல.